| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2022.05.19 |

**நாணயக்கொள்கை மீளாய்வு : இல. 04 – 2022 மே**

**இலங்கை மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கை நிலையினைப் பேணுகின்றது**

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது 2022 மே 18ஆம் நாளன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 13.50 சதவீதம் மற்றும் 14.50 சதவீதம் கொண்ட அவற்றின் தற்போதைய மட்டங்களில் பேணுவதற்குத் தீர்மானித்துள்ளது. அண்மைய காலத்தில் பணவீக்கம் உயர்வடைந்து காணப்படுமென எறிவுசெய்யப்பட்ட போதிலும் 2022 ஏப்பிறல் 08ஆம் நாளன்று இடம்பெற்ற அதன் கூட்டத்தில் சபையினால் எடுக்கப்பட்ட கணிசமான கொள்கைசார்ந்த வழிமுறைகள், திரண்ட கேள்வி அழுத்தங்கள் உறுதியடைவதைக் குறைப்பதற்கான ஏனைய வழிமுறைகளுடன் ஒன்றிணைந்து எதிர்வரவுள்ள காலப்பகுதியில் பணவீக்க எதிர்பார்க்கைகள் மேலும் உயர்வடைவதனை கட்டுப்படுத்துவமற்கும் பணவீக்க அழுத்தங்களை தளர்த்துவதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளதென நாணயச்சபை கருதுகின்றது.

**குறிப்பிடத்தக்க நாணயக் கொள்கை இறுக்கமாக்கள் வழிமுறைகளினைத் தொடர்ந்து சந்தை வட்டி வீதங்களுக்கு விரைவான கடத்தல் அவதானிக்கப்பட்டுள்ளது**

சந்தை வட்டி வீதங்கள் 2022 ஏப்பிறலில் மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட குறிப்பிடத்தக்க நாணயக் கொள்கை இறுக்காக்கள் வழிமுறைகளைப் பிரதிபலித்து குறிப்பிடத்தக்களவு மேல்நோக்கி திருத்தப்பட்டது. சந்தை வட்டி வீதக் கட்டமைப்பில் நிலவிய சில முரண்பாடுகளை சரிசெய்து, நிதியியல் நிறுவனங்களின் வைப்பு மற்றும் கடன்வழங்கல் உற்பத்திகள் மீதான வட்டி வீதங்கள் கணிசமானளவு மேல்நோக்கித் திருத்தப்பட்டுள்ளன. வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட கடன்களின் பெறுமதித் தாக்கத்தினைப் பிரதான காரணமாகக் கொண்டு, 2022 மாச்சில் ரூபா நியதிகளில் உள்நாட்டுக் கொடுகடன் குறிப்பிடத்தக்களவான விரிவாக்கத்தினைப் பதிவுசெய்தபோதிலும் சரிசமம் திருத்தப்பட்ட உள்நாட்டுக் கொடுகடன் விரிவாக்கம் மெதுவடைந்துள்ளதென மதிப்பிடப்பட்டுள்ளது. அதேவேளை, இதன் விளைவான விரிந்த பண வளர்ச்சியின் விரிவாக்கமானது வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் சுருக்கத்தினால் குறைவடைந்துள்ளது. உயர்வடைந்த வட்டி வீதக் கட்டமைப்பானது வங்கித்தொழில் முறைமையினுள் அதிக வைப்புக்களை ஈர்க்கலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், இறுக்கமான நாணயக்கொள்கை வழிமுறைகளின் ஊடுகடத்தலின் காரணமாக குறிப்பாக தனியார் துறைக்கான உள்நாட்டுக் கொடுகடனின் விரிவடைதலானது குறிப்பிடத்தக்களவு தடைப்பட்டிருக்கும். அதேவேளை, அண்மைக்காலத்தில் கணிசமாக அதிகரித்த அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவு வீதங்கள், நாட்டின் அரசியல் உறுதிப்பாட்டினை மீளமைப்பதற்கான புதுப்பிக்கப்பட்ட முயற்சிகளுடன் ஒன்றிணைந்து அவசியமான இறைச் சரிப்படுத்தல்களுடன் எதிர்வரவுள்ள காலத்தில் மிதமடைந்து குறைவான மட்டத்தில் நிலைநிறுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**கொள்கை வழிமுறைகளின் முழுமையான தாக்கத்தினால் துணையளிக்கப்பட்டு பணவீக்கமானது மிதமடைவதற்கு முன்னர் எதிர்வரும் மாதங்களில் உயர்வடைந்து காணப்படுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது**

உள்நாட்டு வழங்கல் பற்றாக்குறைகள், அதிகரித்த உலகளாவிய பண்ட விலைகள், ஆண்டின் இதுவரைகாலப்பகுதியிலும் ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபாவின் பாரியளவிலான தேய்வுத் தாக்கங்கள் என்பவற்றுடன் இணைந்ததான திரண்ட கேள்வி அழுத்தங்களின் தாக்கத்துடன் ஒன்றுசேர்ந்ததன் விளைவாக அண்மைய காலத்தில் முதன்மைப் பணவீக்கம் அதிகரித்துக் காணப்படுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. எனினும், மத்திய வங்கியின் சீராக்கக் கொள்கை வழிமுறைகளின் தாக்கத்தினையும் உள்நாட்டு மற்றும் உலகளாவிய வழங்கல் நிலைமைகளில் எதிர்பார்க்கப்படும் மேம்பாடுகள் என்பவற்றையும் பிரதிபலித்து பணவீக்கம் அதன் பின்னர் மிதமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், அண்மைய நாணய நிலைமைகளை இறுக்கமடையச் செய்தல் அத்துடன் நாணயக் கொள்கைத் தொடர்பூட்டலை வலுப்படுத்தல் என்பன எதிர்வரவுள்ள காலப்பகுதியில் பொதுமக்களின் பணவீக்க எதிர்பார்க்கைகளை நிலைநிறுத்துவதற்கு துணையளிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**வெளிநாட்டுத் துறையானது பல வகையான வழிமுறைகளைக் கொண்டு கையாளப்பட்டு வருகின்றபோதிலும் தொடர்ந்தும் தீவிரமடைந்த சவால்களை எதிர்கொள்கின்றது**

2022 மே நடுப்பகுதியிலிருந்து வங்கிகளுக்கிடையிலான உடனடி செலாவணி வீதத்தை நிர்ணயிப்பதில் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வழிகாட்டலானது உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்படும் ஏதேனும் மிதமிஞ்சிய தளம்பலைக் குறைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. நாணயக் கொள்கை நிலையினை அண்மையில் இறுக்கமடையச் செய்தல், திறந்த கணக்கு நியதிகள் மீதான இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தல் அத்துடன் வங்கிகளினால் மத்திய வங்கிக்கு கட்டாய வெளிநாட்டுச் செலாவணி விற்பனையின் விகிதத்தினைக் குறைத்தல் என்பவற்றுடன் இது ஒன்றிணைந்து இலங்கை ரூபா மீதான அழுத்தத்தினைத் தளர்த்துகின்ற அதேவேளை, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவத்தன்மையினை படிப்படியாக மேம்படுத்துமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், செலவினை சமாளிப்பதற்கான பாரியளவு நிதியங்கள் கிடைக்கச்செய்யப்பம்டுவரை அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு நிதியளிப்பதற்கு வெளிநாட்டுச் செலாவணியை திரட்டுவதற்கு இவ்வழிமுறைகள் உதவுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அலுவல்சார் செலாவணி வீதத்திற்கும் கண்காணிக்கப்படாத சந்தையினால் வழங்கப்படும் வீதத்திற்குமிடையிலான இடைவெளியினை குறிப்பிடத்தக்களவு குறைத்தல் மற்றும் தொழிலாளர் புலம்பெயர்வில் அதிகரிப்பு என்பன காரணமாக தொழிலாளர் பணவனுப்பல் நியதிகளில் வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களில் சில மீளுகை எதிர்பார்க்கப்படுகின்றது எவ்வாறாயினும் சுற்றுலாத் துறை பற்றிய அண்மைக்கால எதிர்காலநோக்கு உலகளாவிய மற்றும் உள்நாட்டு காரணிகள் இரண்டினதும் தாக்கத்தினால் சாதகமற்றதாகவிருக்கும் வாய்ப்புள்ளது. அதேவேளை, 2022 ஏப்பிறல் இறுதியிலுள்ளவாறு மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், உபயோகம் மீதான நிபந்தனைகளுக்குட்படுகின்ற ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.5 பில்லியனுக்குச் சமமான சீன மக்கள் வங்கியிடமிருந்து கிடைத்த பரஸ்பர நாணயப் பரிமாற்றல் ஒப்பந்த வசதி உள்ளடங்கலாக ஐ.அ.டொலர் 1.8 பில்லியனாக தற்காலிகமாக மதிப்பிடப்பட்டது. பொருளாதாரம் எதிர்கொள்கின்ற பேரண்டப் பொருளாதார சவால்களைத் தீர்ப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றினை நோக்கி பணியாற்றுவதை நோக்காகக் கொண்டு மத்திய வங்கியும் அரசாங்கமும் பன்னாட்டு நாணய

நிதியத்துடன் தொழில்நுட்ப மட்டக் கலந்துரையாடல்களைத் தொடங்கியுள்ள அதேவேளை, வெளிநாட்டு படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையினைத் தொடங்குவதற்கு துரிதமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேவேளை அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதிக்கு நிதியிடுவதற்கும் சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை வலுப்படுத்துவதற்கும் தேவையான வெளிநாட்டுச் செலாவணியினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு செலவுகளை சமாளிப்பதற்கான நிதியினைப் பெற்றுக்கொள்வதற்காக இருபுடை மற்றும் பல்புடை பங்காளர்களுடனான பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**இவ்வாண்டில் பொருளாதார வளர்ச்சி பின்னடைவொன்றினைப் பதிவுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது**

பல்வேறு முன்னணிக் குறிகாட்டிகளாலும் பிரதிபலிக்கப்பட்டவாறு தற்போது இடம்பெறுகின்ற வழங்கல் பற்றாக்குறைகள், வலுசக்தி தொடர்புபட்ட சிக்கல்கள் மற்றும் சமூக ரீதியான பதற்றங்கள் என்பன மூலம் பொருளாதார நடவடிக்கை கணிசமானளவு பாதிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மத்திய வங்கியின் கேள்வி முகாமைத்துவக் கொள்கைகளும் எதிர்பார்க்கப்பட்ட இறைத் திரட்சி வழிமுறைகளும் ஆண்டுகாலப்பகுதியில் குறைவடைந்த திரண்ட கேள்வியினைப் பேணுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, கிழக்கு ஐரோப்பாவில் நிலவுகின்ற புவிஅரசியல்சார் பதற்றங்களின் கசிவுத்தாக்கங்களுடன் ஒன்றிணைந்து பணவீக்க அழுத்தங்களை முறியடிப்பதற்கு உலகிலுள்ள மத்திய வங்கிகள் மூலமான நாணயக் கொள்கை இறுக்கமடையச்செய்தலுக்கு பதிலிறுத்தி உலகளாவிய பொருளாதார வளர்ச்சியும் மிதமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும் கொள்கை சார்ந்த வழிமுறைகள் அரசாங்கத்தின் போதுமான மற்றும் உரியகால கொள்கை சீராக்கங்கள் மூலம் மீள் வலுப்படுத்தப்படவேண்டும்**

பொருளாதார நிலைமைகள் மேலும் சீர்குலைவதனைத் தடுத்து இதுவரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் முயற்சிகளுக்கு நிறைவளிக்கும்பொருட்டு ஒத்திசைவான ஆளுகை மற்றும் சமூக ஐக்கியம் ஆகியன ஊடாக மிகுந்த அரசியல் உறுதிப்பாட்டினை மீளமைப்பதற்கு அவசர வழிமுறைகள் அவசியப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, நாணய நிதியளித்தல் மீது மிதமிஞ்சித் தங்கியிருப்பதைத் தவிர்ப்பதற்கும் நடுத்தரகாலத்தில் இறைசார்ந்த நிலைபெறுதன்மையினைப் பேணுவதற்கும் உதவக்கூடிய இறைச் செயலாற்றத்தினை வலுப்படுத்துவதற்கு விரைவான கொள்கை நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. மேலும், வலுசக்தியுடன் தொடர்புடைய அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நிதியியல் நிலைமைகளை வலுப்படுத்துகின்ற அதேவேளை எதிர்பாராத பொருளாதாரச் சூழ்நிலைகளினால் பாதிக்கப்படும் சமூகத்தின் பாதிக்கப்படக்கூடிய வகுப்பினருக்கு ஆதரவளிப்பதற்கான சமூக நலனோம்புகை நிகழ்ச்சித்திட்டங்களின் வினைத்திறனை மேம்படுத்தும் பொருட்டு வலுசக்தித் துறையில் துரிதமான மற்றும் வெளிப்படையான கட்டணத் திருத்தங்கள் முன்னுரிமையளிக்கப்படவேண்டியவையாக விளங்குகின்றன.

**கொள்கை வட்டி வீதங்கள் தற்போதைய மட்டங்களில் பேணப்படுகின்றன**

உலகளாவிய மற்றும் உள்நாட்டு நடப்பு மற்றும் எதிர்பார்க்கப்படும் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளை கவனமாகப் பரிசீலனையில் கொண்டதன் பின்னர், இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது, 2022 மே 18ஆம் நாளன்று இடம்பெற்ற அதன் கூட்டத்தில் மத்திய வங்கியின்

துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 13.50 சதவீதம் மற்றும் 14.50 சதவீதம் கொண்ட அவற்றின் தற்போதைய மட்டங்களில் பேணுவதற்குத் தீர்மானித்துள்ளது. மத்திய வங்கியினால் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கொள்கைசார்ந்த வழிமுறைகள் நிதியியல் சந்தைகளுக்கு மேலும் தொடர்ந்தும் ஊடுகடத்தப்படுகின்ற அதேவேளை, இறுக்கமான நாணயக் கொள்கையின் சில சமிக்ஞைகள் உண்மைப் பொருளாதார நடவடிக்கையில் ஏற்கனவே அவதானிக்கப்பட்டுவருகின்றதென நாணயச்சபை அபிப்பிராயப்பட்டது. மத்திய வங்கியானது தொடர்ந்தும் உள்நாட்டு மற்றும் உலகளாவிய பேரண்டப் பொருளாதாரங்களையும் நிதியியல் சந்தை அபிவிருத்திகளையும் கண்காணிப்பதுடன் எதிர்வரவுள்ள காலப்பகுதியில் பொருளாதாரத்தில் பாரிய பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை மீள்வலிமைப்படுத்துவதற்கு முனைப்புடன் உதவுவதற்கு பொருத்தமான வழிமுறைகளை எடுப்பதற்கும் தயாராகவுள்ளது.

| **நாணயக் கொள்கை தீர்மானம்:** | **கொள்கை வீதங்கள் மற்றும் நியதி ஒதுக்கு வீதங்கள் மாற்றமடையவில்லை** |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 13.50% |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 14.50% |
| நியதி ஒதுக்கு விகிதம் | 4.00% |

**தகவல் குறிப்பு:**

ஆளுநர் முனைவர் பி. நந்தலால் வீரசிங்க அவர்களின் தலைமையிலான ஊடக மாநாடு இலங்கை மத்திய வங்கியின் கேட்போர்கூடத்தில் 2022 மே 19ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு நடைபெறுவதுடன் முகநூல் மற்றும் யு ரியூப் (YouTube) என்பவற்றின் வாயிலாக நேரலையாக இடம்பெறும்.

நாணயக் கொள்கை மீதான அடுத்த கிரமமான அறிக்கை 2022 யூலை 07ஆம் நாளன்று வெளியிடப்படும்.

**இணைப்பு I**

## அட்டவணை 01: பணவீக்கம்

| மாதம் | | செத் 21 | ஒத் 21 | நவெ 21 | திசெ 21 | சன 22 | பெப் 22 | மாச் 22 | ஏப் 22 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **முதன்மைப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்)** | கொநுவிசு (2013=100) | 5.7 | 7.6 | 9.9 | 12.1 | 14.2 | 15.1 | 18.7 | 29.8 |
| | தேநுவிசு (2013=100) | 6.2 | 8.3 | 11.1 | 14.0 | 16.8 | 17.5 | 21.5 | - |
| **மையப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்)** | கொநுவிசு (2013=100) | 5.0 | 6.3 | 7.0 | 8.3 | 9.9 | 10.9 | 13.0 | 22.0 |
| | தேநுவிசு (2013=100) | 4.8 | 7.2 | 8.8 | 10.8 | 12.9 | 14.1 | 17.3 | - |

*மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*

## அட்டவணை 02: நாணயத் துறை அபிவிருத்திகள் (தற்காலிகமானவை)

| குறிகாட்டி | வெளிநின்ற தொகை (ரூ.பில்லியன்) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | யூலை 21 | ஓகத் 21 | செத் 21 | ஒத் 21 | நவெ 21 | திசெ 21 | சன 22 | பெப் 22 | மாச் 22 (அ) |
| ஒதுக்குப் பணம் | 1,064 | 1,089 | 1,296 | 1,286 | 1,288 | 1,306 | 1,337 | 1,324 | 1,387 |
| விரிந்த பணம் ($M_{2b}$) | 10,304 | 10,514 | 10,488 | 10,582 | 10,546 | 10,647 | 10,668 | 10,755 | 11,575 |
| தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | (699) | (701) | (722) | (837) | (906) | (982) | (1,216) | (1,275) | (1,889) |
| தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 11,003 | 11,215 | 11,210 | 11,418 | 11,452 | 11,629 | 11,883 | 12,030 | 13,464 |
| அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் | 5,411 | 5,531 | 5,595 | 5,665 | 5,714 | 5,832 | 6,045 | 6,094 | 6,543 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் | 1,141 | 1,137 | 1,123 | 1,194 | 1,185 | 1,188 | 1,192 | 1,238 | 1,548 |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 6,661 | 6,796 | 6,825 | 6,860 | 6,920 | 6,981 | 7,017 | 7,051 | 7,529 |
| விரிந்த பணம் ($M_4$) | 12,563 | 12,790 | 12,742 | 12,873 | 12,862 | 12,985 | 13,058 (ஆ) | 13,167 | - |

அ) 2022 மாச்சில் நாணய மற்றும் கொடுகடன் கூட்டுகளின் அதிகரிப்பிற்கு 2022 மாச்சில் இலங்கை ரூபாவில் சடுதியான தேய்வு முக்கிய காரணமாகக் காணப்படுகின்றது.

ஆ) திருத்தப்பட்டது.

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

## அட்டவணை 03: வட்டி வீதங்கள்

| வட்டி வீதம் (%) | நவெ 21 முடிவில் | திசெ 21 முடிவில் | சன 22 முடிவில் | பெப் 22 முடிவில் | மாச் 22 முடிவில் | ஏப் 22 முடிவில் | 2022 மே 18இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|---|
| **மத்திய வங்கியின் கொள்கை வீதங்கள்** | | | | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 5.00 | 5.00 | 5.50 | 5.50 | 6.50 | 13.50 | 13.50 |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 6.00 | 6.00 | 6.50 | 6.50 | 7.50 | 14.50 | 14.50 |
| **வங்கி வீதம்** | 9.00 | 9.00 | 9.50 | 9.50 | 10.50 | 17.50 | 17.50 |
| **நிறையேற்றப்பட்ட சராசரி அழைப்புப் பணவீதம்** | 5.92 | 5.95 | 6.48 | 6.48 | 7.49 | 14.50 | 14.50 |
| **திறைசேரி உண்டியல் விளைவுகள் (முதலாந்தரச் சந்தை)** | | | | | | | |
| 91-நாள் | 7.53 | 8.16 | 8.63 | 8.61 | 12.92 | 23.53 | 24.07 |
| 182-நாள் | 8.02 | 8.33 | 8.55 | 8.53 | 12.25 | 23.96 | 24.69 |
| 364-நாள் | 8.16 | 8.24 | 8.55 | 8.53 | 12.28 | 24.09 | 24.50 |
| **கடன்வழங்கல் வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் (வாராந்தம்) | 8.00 | 8.61 | 8.52 | 8.99 | 9.85 | 16.38 | 19.36 (அ) |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் | 9.79 | 9.87 | 10.12 | 10.13 | 10.35 | - | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம் | 9.18 | 9.48 | 9.76 | 10.07 | 10.73 | - | - |
| **வைப்பு வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 4.82 | 4.94 | 5.01 | 5.07 | 5.17 | 5.52 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 5.75 | 5.94 | 6.05 | 6.15 | 6.30 | 6.84 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 6.27 | 6.45 | 6.58 | 6.50 | 7.68 | - | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நிலையான வைப்பு வீதம் | 6.52 | 6.67 | 6.79 | 6.75 | 8.06 | - | - |

(அ) 2022 மே 13 அன்று முடிவடைகின்ற வாரத்திற்கானது

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*